**ரத்கம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 29 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, ரத்கம பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்புக்களின் வட்டி வருமானம் ரூபா 72,293 தொகை மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிலையான வைப்புக்களில் வட்டி வருமானம் ரூபா 20,830 தொகையினாலும் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வர்த்தக அனுமதிப் பத்திர கடன்பட்டோர் ரூபா 27,208 தொகை மிகையாகவும் மற்றும் நீதி மன்றத் தண்டப்பண கடன்பட்டோர் ரூபா 51,000 தொகை குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி ரூபா 495,540 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த முற்பணங்களில் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 351,842 தொகை செலவுகள் என கணக்கீடு செய்திருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 13,677,180 இற்கான பங்களிப்பு தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஊ) சம்பளமற்ற விடுமுறை தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 39,550 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 100,241,952 தொகைக்கான 06 கணக்கு விடயங்களுக்கு உரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய பதிவேடுகளில் காணப்படுகின்ற மீதிகளிடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 1,808,553 தெகையாகும்.

**1.3.3 தொங்கல் கணக்கு**

தொங்கல் கணக்கில் ரூபா 288,833 தொகைக்கான வரவு மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நீண்டகாலம் முதல் நிதிக் கூற்றுக்களில் முன் கொண்டுவரப்பட்டு காணப்படும் கூட்டுத்தொகை ரூபா 10,053,912 தொகைக்கான பெற வேண்டிய 05 கணக்கு மீதிகளை இனங்கண்டு கணக்குகளை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2014 ஆண்டு நிர்மாண வேலை ஒன்று தொடர்பாக கடன்பட்டோர் ரூபா 1,878,640 தொகையினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2001 ஆண்டு முதல் மாற்றமின்றி முன்கொண்டுவந்து காணப்படும், வருமானம் முற்பெறுவனவுகள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகளின் கூட்டுத்தொகை ரூபா 571,597 தொகைக்கான செலுத்த வேண்டிய 02 கணக்குகளின் பெறுமதியினை இனங்கண்டு தீர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2015 ஆண்டு முதல் மாற்றமின்றி முன் கொண்டுவந்து காணப்படும் ரூபா 553,504 இற்கான ஏனைய கடன் கொடுத்தோர் மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) ரூபா 5,507,420 தொகைக்கான நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதியில் காணப்பட்ட 04 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 2,492,788 தொகையினை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.5 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையினால் ரூபா 33,211,172 இற்கான 12 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமான மெய்மையாய்வதற்கு முடியாதிருந்தது.

(ஆ) பௌதீக ரீதியாக அல்லது ஆவணப்படுத்திக் காணப்படாத ரூபா 234,633 தொகைக்கான நீர் வழங்கல் தொடர்புடைய பொருட்களில் இருப்பு மற்றும் ரூபா 73,764 தொகைக்கான இரும்பு கபிநெட்டுக் கணக்கின் மீதிகள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.

### 1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| விதி 33 | வீதி வரி செலுத்துவதை புறக்கணிப்பு நபர்கள் தொடர்பாக அட்டவணைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. |
| விதி 59 | சபையின் அதிகார பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு கைத்தொழில்கள் தொடர்பாக அட்டவணை ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலியின் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப் பிரமாணம் 1645,1646 | சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்கு உரிய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றுகை பொழிப்பு கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் | 06 பிரதியீட்டு ஊழியர்களுக்காக 2002 ஆண்டு முதல் 2010 ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய 03 சதவீத பங்களிப்புத் தொகை செலுத்தாமையால் ரூபா 25,222 மிகை விதிப்பு தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 18,611,431 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,308,224 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,372,294 | 1,235,812 | 1,601,703 | 15,302,885 | 1,500,000 | 1,434,164 | 881,743 | 10,741,108 |
| வாடகை | 105,600 | 105,600 | 110,590 | 669,054 | 1,000,000 | 105,600 | 108,090 | 674,044 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 568,183 | 675,587 | 675,587 | 81,622 | 800,000 | 34,621,090 | 521,399 | 81,622 |
| | 2,046,077 | 2,016,999 | 2,387,880 | 16,053,561 | 3,300,000 | 36,160,854 | 11,511,232 | 11,496,774 |

### 2.2.2 வீத வரியும் வரியும்

**(அ) வீதவரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு தொடர்பாக அறிவிடப்பட வேண்டியிருந்த ரூபா 11,976,920 தொகையான வீதிவரியில் ஆண்டின் போது அறவிடப்படல் 13 சதவீதமாக காணப்பட்டதால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வீத வரி மீதி ரூபா 15,302,885 ஆகக் காணப்பட்டது. அந்த மீதிக்கு ஆரம்ப மீதியுடன் ஒப்பாக ரூபா 4,561,777 இனால் மிகைத்திருந்ததுடன் ரூபா 2,424,589 தொகையான நிலுவை தொகையான அறவீடு செய்வதற்கு 2017 ஆண்டின் போது ஆதனங்களை தடை செய்யும் உத்தியோகத்தர் இருவருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், நிலுவை தொகையில் 17% எண்ணிக்கை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ii) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158(1)(அ) வின் பிரகாரம் நிலுவை வீத வரியை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரித்து செயற்படுத்துவது தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) வர்த்தக வரி**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 179,800 தொகை நிலுவை வர்த்தக வரி மற்றும் ரூபா 151,130 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டவைகளில் 40 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருந்ததுடன், வருட இறுதியில் காணப்பட்ட நிலுவை ரூபா 197,140 தொகை வரை அதிகரித்திருந்தது. நிலுவை வர்த்தக வரியை அறவீடு செய்வதற்காக

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**2.2.3 வாடகை**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 674,044 இற்காக நிலுவை தொகையில் மற்றும் ரூபா 105,600 இற்கான ஆண்டிற்கான சிட்டையிடப்பட்டவைகளில் 14 சதவீதம் மாத்திரம் ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 669,054 இற்கான நிலுவை வாடகை மீதியொன்று காணப்பட்டது. நிலுவை வாடகையை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 81,622 இற்காக நிலுவை வியாபார அனுமதிப்பத்திர கட்டண மீதியில் மற்றும் ரூபா 675,587 இற்காக ஆண்டிற்காக சிட்டை இடலில் 89 சதவீதம் மாத்திரம் ஆண்டின்போது அறவிடப்பட்டிருந்த போதிலும், வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை மீதியாகிய ரூபா 81,622 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. சபையினால் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 152(4) இன் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம்**

மாகாண சபையின் பிரதான செயளாலரிடன் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 12,918,424 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 40,464,699 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) துணை விதிகள்**

பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 126 இன் கீழ் 30 பிரதான கருமங்கள் நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் ஆக்க வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் துணை விதிகள் ஆக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

பிரதேச சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயல்பணிகளுக்காக வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

**(இ) கைவிடப்பட்ட செய்பணிகள்**

பிரதேச சபை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் 2016 செப்டம்பர் 08 திகதி கிடைத்திருந்த ரூபா 1,000,000 இனால் 13 செயற்திட்டப் பிரேரணைகள் பூர்த்தி செய்வதற்கு அங்கிகரிக்கப்பட்டிருந்தது. அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் எதுவும் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன், ரூபா 146,200 தொகை செலவிடப்பட்டு சபையின் வாகனங்களின் திருத்தி வேலை மேற்கொள்ளப்பட்டு மீதியாகவுள்ள ரூபா 853,800 தொகை ஆக்கபூர்வமான செயற்திட்டம் ஒன்றிற்கு பயன்படுத்தப்படாமல் 2017 ஆகஸ்ட் மாதம் உரிய அமைச்சுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது.

**(ஈ) திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் பரிசோதனையின் போது பின்வரும் தகவல்கள் கண்டறியப்பட்டன.

(i) சபையினால் வகைப்படுத்தப்பட்டுள்ள குப்பைகளை மொன்றோரியா தோட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஒப்படைத்தல் மேற் கொள்ளப்பட்டு வந்த போதிலும், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் குப்பை முகாமைத்துவ அலுவல்களை முறைப்படுத்தல் தொடர்பாக PL/1/5/12 ஆம் இலக்க வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்படுவதற்காக நீண்டகால முறையான திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

(ii) சேதனப் பசளை உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்ட ரூபா 599,000 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டது.

(iii) உள்ளூராட்சி திணைக்களத்தின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பகிர்ந்து கொடுப்பதற்காக வழங்கப்பட்டிருந்த 930 குப்பைப் பாத்திரங்களை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் சபையில் விளைவற்றுக் காணப்பட்டது.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டம் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஒரு மாதத்திற்கு சுமார் இரண்டு இலட்சம் ரூபா வருமானம் உழைக்கக்கூடிய சாக்கடை பவுசர் 2014 ஆண்டு முதல் விளைவற்றுக் காணப்பட்டது. 2014 செப்டம்பர் மாதம் தென்மாகாண, உள்ளூராட்சி திணைக்கள இயந்திர பொறியியளாலர் பவுஸரை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கும்படி அறிவித்திருந்த போதிலும், 2018 ஏப்ரல் வரை அது தொடர்பான நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2014 ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தொடர் வேலை ஒன்றாகிய நிர்மாண வேலை தொடர்பாக சிட்டைகள் 2016 செப்டம்பர் 30 திகதிக்கு முன்னர் உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) இற்கு சமர்ப்பிப்பதற்காக சபையினால் நடவடிக்கை எடுக்காமையினால், சிட்டைகளுக்கான கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்ததுடன், சிட்டைகளின் பெறுமதியாகிய ரூபா 268,849 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கு நேரிட்டிருந்தது.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

ஆளணித் திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை மிகைத்து 10 பேர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிக்களில் 04 வெற்றிடங்கள் காணப்பட்டன. வெற்றிடங்களை நிரப்புவதற்கு மற்றும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) ஊழியர் கடன்**

சபையில் கடமையாற்றிய ஊழியர்கள் 11 பேரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 335,387 இற்கான கடன் தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2002 ஆண்டின் போது உள்நாட்டு கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த ரூபா 1,748,007 இற்கான கடன் தொகையை பயன்படுத்தி சபையின் அதிகாரப் பிரதேசத்தில் குறைந்த வருமானம் பெறுவோருக்காக பொது சந்தைக்கு அண்மையில் 02 கழிவறை முறைமைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. 04 வருடங்களுக்கு பின்னர் அதே இடத்தில் சிலை ஒன்று நிர்மாணிக்கப்பட்டதால் கழிவறை முறைமை உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்கான சபையின் அங்கீகாரமும் பெற்றிருக்கவில்லை. கடன்தொகைக்காக மாதாந்தம் ரூபா 15,497 தொகை வீதம் 2021 மார்ச் 30 ம் திகதி வரை கடன் தவணைப் பணம் செலுத்த வேண்டியிருந்ததுடன், இந்த கடன் தொகையிலிருந்து நலன்கள் ஏதும் அதிகாரப் பிரதேச மக்களுக்கு கிடைத்திருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

மீளாய்வாடிற்கான திருத்திய நிதிக்கூற்று 2018 ஏப்ரல் 05 திகதி சமர்பித்திருந்தது.

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 06 மீண்டுவரும் செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 9,465,063 தொகைக்கான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், அப்பெறுமதி 03 சதவீதம் முதல் 85 சதவீத வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) இரண்டு செலவு விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மிகைத்து ரூபா 220,431 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்துடன், அப்பெறுமதி 31 சதவீதம் மற்றும் 33 சதவீதமாகக் காணப்பட்டது.

(இ) வருமான விடயமொன்றில் பிரதிகூலமான முரண் ரூபா 378,708 தொகை ஆக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 20 சதவீதமாக இருந்தது.

## 4.3 உள்ளகக் கணக்காய்வு

சபையில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்திருந்த போதிலும், போதியளவான உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

காணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமை | | குறைபாடு |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் | (i) | நிலையான சொத்துக்கள் பதிவேடு முறைப்படி பேணப்பட்டிருக்காமை. |
| | | (ii) | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்தக் கணிப்பீடு மேற்கொள்ளளப்பட்டிருக்காமை. |
| (ஆ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்தல் முறைப்படி இருக்காமை. |
| | | (ii) | நிலுவை வருமான காலப்பகுப்பாய்வு ஒன்று தயாரித்திருக்காமை |
| | | (iii) | முன்னேறிய பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்திருக்காமை. |
| (இ) | கணக்கீடு மற்றும் பதிவேடுகள் பேணல் | (i) | முன்னைய ஆண்டுகளில் இருந்து மாற்றமின்றி முன்கொண்டுவரப்பட்டு காணப்படும் கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | நிதிக்கூற்றுக்களில் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய அட்டவணைகள் இடையே காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே, வித்தியாசங்கள் காணப்படல். |
| | | (iii) | உள்நாட்டு கடன்கள் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து பெற்றிருந்த கடன் தவணைப் பணத்தை செலுத்துதல் தொடர்பான பதிவேடு ஒன்ற பேணப்படாமை. |
| (இ) | பதவியணி முகாமைத்துவம் | (i) | சபையின் மேலதிக பதவியணிகளை முறைப்படுத்தாமை. |
| | | (ii) | ஓய்வு பெற்ற மற்றும் இறந்த உத்தியோகத்திர்களின் கடன் மீதிகளை அறவீடு செய்யாமை. |
| (ஈ) | நிதி முகாமைத்துவம் | | நாளது வரை வங்கி இணக்க கூற்றுக்கள் தயாரித்திருக்காமை. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) | செலவுகள் மற்றும் வருமானங்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொண்டு பாதீட்டை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |